# யாழ். கே.குணரட்ணம் அவர்களின் 30வது நினைவாண்டு அஞ்சலி

### ஆகஸ்ட் 9, 1983 இல் அடையாளம் காணப்படாத நபர்களால் கொடூரமாக சுட்டுக்கொல்லப்பட்டார்



**1982 இல் நான் ஒழுங்குசெய்த விருந்துபசாரமொன்றில் காலஞ்சென்ற திரு. கே. குணரட்ணம் *(மத்தியில்)*, மற்றும் காலஞ்சென்ற திரு.ந.ஜி.பி. பண்டிதரத்ன *(வலது)*, ஆகியோருடன் நான் *(இடது)***

பரவலாக கே. ஜி. என அனைவராலும் அறியப்பட்ட திரு. கே. குணரட்ணம் அவர்கள் யாழில் சிறிதளவில் தொடங்கிய வர்த்தகத்தினை பின்னாளில் கொழும்பில் ஆரம்பித்தார். அவருடன் 1974 இல் அவரது மகன் ஜி.ர. பத்மராஜ் மூலமாக அறிமுகமானேன். அவரது வர்த்தகத்தில் என்னையும் இணைந்துகொள்ளும்படி திரு. கே.குணரட்ணம் அவர்கள் என்னை வேண்டிக்கொண்டதற்கு அமைய பகுதி நேர முகாமைத்துவ ஆலோசகராக 1974 இல் அவர்களது வர்த்தகத்தில் இணைந்தேன். அவர் எனக்கென தனியான ஒரு அலுவலக அறையை அமைத்து வேலைகளை ஒருங்கிணைக்க ஒரு காரியதரிசியையும் பணியமர்த்தினார். நான் நேரடியாக அவருக்கு கீழே பணிபுரிந்ததுடன் அவரது அனைத்து நிர்வாகிகளும் இதுகுறித்து அறிந்திருந்தனர். நான் பெருமளவில் வர்த்தகத்தின் தலைவர் திரு.கே.குணரட்ணம் அவர்களுக்கான நிர்வாக ஆலோசகராகவே கடமைபுரிந்தேன்.

அவர் வெளிநாடுகளுக்கு விஜயம் செய்யும் போது தவிர்ந்து ஏனைய அனைத்து நாட்களிலும் அவரது மதிய உணவு நேரத்திற்கு முன்பதாக நான் தினமும் அவரை சந்திப்பதுண்டு. அவர் தனது மதிய ஓய்வு நேரத்திலே எக்காரணம் கொண்டும் யாரும் அவரை இடையூறு செய்யலாகாது என்பதனை கண்டிப்புடன் தெரிவித்திருந்தார். அவர் மாலை நேரங்களில் பல்வேறு மட்டங்களிலான மக்களுடன் நெருங்கிய நட்பினையும் வர்த்தக உறவுகளையும் கிராமமாக பேணிவந்தார்.

திரைப்பட துறையில் தனது வர்த்தகத்தினை ஆரம்பித்தது முதல் அவர் இலங்கையின் புகழ்பெற்ற திரைப்பட தயாரிப்பாளர், விநியோகஸ்தர் மற்றும் நாடளாவிய ரீதியில் பல்வேறு திரையரங்குகளின் உரிமையாளருமானார். அவர் சிங்கள திரைத்துறையின் எடி ஜயமன்ன, ருக்மணி தேவி, ஆனந்த ஜயரத்ன, சாண்டி குமாரி மற்றும் பழம்பெரும் நடிகர் காமினி பொன்சேகா போன்ற பல ஆளுமைகளை ஈர்த்தும் வளர்த்தும் இருந்தார். அவரது தயாரிப்புகளிலே "போத்துகீசி காரயா " என்ற புகழ்பெற்ற பாடல் அடங்கிய "சந்தேசய" எனும் திரைப்படம் மிக பிரபலமானது. இத்திரைப்படத்தின் மூலம் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் ஒரு இயக்குனராகவும் அறியப்பட்டதுடன் அரிசேன் அஹபுது அப்பாடலின் மூலன் அங்கீகரிக்கப்பட்டார்.

25 திரைப்படங்களுக்கு அதிகமாக திரைப்படங்களை தயாரித்ததன் மூலம் திரு. கே. குணரட்ணம் அவர்கள் சிங்கள திரை துறையினை வளர்த்திருந்தார். "சுஜாதா, வரத காகேத, ரதல பிலிருவ, துப்பதாகே துக, வன மோஹினி, சூறையா, வீர விஜய, தீவரயோ, அல்லபு கெதர, சண்டியா, ஒப துடுத, அடவெனி புதுமய, லக்செத கொடிய, ஆத்ம பூஜா, ஹொந்தை நரகை, சந்தேஷய போன்ற திரைப்படங்கள் அவற்றுள் சில என்பதுடன் 1983 இன் கொடிய கருப்பு ஜூலை கலவரத்தின் விளைவாக சில திரைப்படங்கள் நிகழ்கால சந்ததிக்கு தெரியப்படாமல் அழிந்து போயின.

திரு.கே.குணரட்ணம் அவர்கள் பல்வேறு தொழில்சார் துறைகளில் ஈடுபட்டிருந்தார், குமிழ் முனை பேனை உற்பத்தி, கடதாசி கொள்கலன்கள், பிளாத்திக் கொள்கலன்கள், கலைத்துறை பணிகள், போன்றவற்றோடு ஜா ஏல பகுதியில் நூல் மற்றும் நெசவு ஆலையினை கொண்டிருந்தார். இதில் பிற்காலத்தில் 200 பிணக்கோல் தரிகளாக விருத்திசெய்யப்பட்ட 24,000 ஸ்விஸ் ரெய்ட்ர் சூழல் அச்சுக்களும், காணப்பட்டன. இவற்றுள் 100 தரிகள் 1983 ஜூன் மாதத்தில் இறக்குமதி செய்யப்பட்டு ஆகஸ்ட் 1983 இல் வெளிநாட்டு பொறியியலாளர்களினால் நெசவு ஆலையில் பொருத்தப்படும் வரை ஹெந்தலை பகுதியில் காணப்பட்ட தொழிற்துறை வளாகத்தில் தற்காலிகமாக களஞ்சியப்படுத்தப்பட்டது. இத் தொழிற்துறை வளாகத்தில் திரைப்படங்கள் தயாரிக்கப்பட்ட விஜயா ஸ்டுடியோவும் அமைந்திருந்தது. இதற்கு மேலதிகமாக ஸ்டுடியோ வசதிகள் கொழும்பு 5 இல் காணப்பட்ட கிருல வீதியிலும் அமைக்கப்பட்டிருந்தது.

ஹெந்தளவில் காணப்பட்ட தொழிற்துறை வளாகத்தில் கடதாசி கொள்கலன், பிளாத்திக் கொள்கலன் மற்றும் குமிழ்முனை பேனா போன்ற உற்பத்தித் தொழ்ற்சாலைகள் நவீன தொழில்நுட்பம் மற்றும் இயந்திரங்களுடன் வடிவமைக்கப்பட்டிருந்ததுடன் கொழும்பு 10 இந்த ஸ்ரீ சங்கராஜா மாவத்தையில் தலைமை காரியாலயத்தினை கொண்டிருந்தது. இங்கு அச்சகம் ஒன்று காணப்பட்டதுடன், சினிமா துறை தலைமையகம் கொழும்பு 13 இன் புதிய செட்டி வீதியில் அமைந்திருந்தது.

ஹெந்தளையின் தொழிற்துறை வளாகத்தில் பாரிய அளவில் கடதாசி உருளைகளும் பிளாஸ்திக் துகள்களும் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. 1983 இன் இனக் கலவரத்தின் தொடக்க நாள் இரவு திரு.கே.குணரட்ணம் அவர்கள் புல்லெர்ஸ் வீதியில் காணப்பட்ட அவரது சொகுசு இல்லத்திலிருந்து கலவரக்காரர்களினால் துரத்தப்பட்டார், அதிஷ்டவசமாக அவ்வீடு தீக்கிரையாக்கப்படவில்லை. பின்பு அவர் நிர்வாகியாக இருந்த அப்போதைய ஹாலிடே இன் விடுதியில் ஒரு தனி மாடியினை தனக்கென ஒதுக்கி அங்கு தஞ்சம் புகுந்திருந்தார். சில நாட்களின் பின் அவரது பிறந்த நாளாகிய ஜூலை 30. 1983 இல் நான் ஊரடங்கு நேர கடவுசீட்டுடன் சென்று அவரை சந்தித்தேன், அப்போது அவர் மனம்நொந்து அழுதார்.

ஹெந்தலை பகுதியில் காணப்பட்ட தொழிற்துறை வளாகம் தீமூட்டப்பட்டு அங்கு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த பாரிய கடதாசி மற்றும் பிளாத்திக் துகள்கள் காரணத்தினால் இரண்டு வாரங்களுக்கு அதிகமாக தீப்பற்றிக்கொண்டிருந்தது. இதில் பொறுத்தப்படுவதற்காக களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த புத்தம் புதிய 100 பிணக்கோல் தரிகளும் அழிக்கப்பட்டது, இவை பொறுத்தப்படுவதற்காக களஞ்சியப்படுத்தப்பட்ட காரணத்தினால் எவ்வித காப்புறுதியும் காணப்படவில்லை இதினிமித்தம் திரு.கே.குணரட்ணம் 200 மில்லியன் ரூபாய்க்கு அதிகமாக இக்கலவரத்தினால் நஷ்டமடைந்ததுடன் பார்ன்ஸ் இடத்தில் ஒரு சிறிய வீட்டிற்கு இடம்பெயர்ந்தார்.

டவர் டாக்கீஸ் என்றறியப்பட்ட சிங்கள நாடகங்கள் மற்றும் கலைஞர்களை வளர்த்த டவர் மண்டபத்தின் பிரதான உரிமையாளர் திரு.கே.குணரட்ணம் ஆவார். ஜனாதிபதி ர. பிரேமதாச அவர்கள் அதனை அரசுடைமையாக்க விண்ணப்பித்தவேளை எவ்வித தயக்கமுமின்றி அதனை அரசாங்கத்திற்கு பரிசளித்தார். இன்று டவர் மண்டப அரங்கு என்று வடிவம் பெற்றுள்ள இவ்வரங்கம் திரு.கே.குணரட்ணம் அவர்களின் பெறுமதிவாய்ந்த மனிதநேயமிக்க அன்பளிப்பினை எங்கும் குறிப்பிட்டு நிற்கவில்லை. இதற்கு அவரது பெயர் சூட்டப்பட்டிருக்க வேண்டும்.

ஜனாதிபதி ர.பிரேமதாச அவர்கள் அவரது வரலாற்று முக்கியம் மிக்க யாழ் விஜயத்தினை மேற்கொண்டிருந்தபோது திரு.கே.குணரட்ணம் அவர்களும் நானும் அங்கு தனிப்பட்ட முறையில் சென்றிருந்தோம். அவர், ஜனாதிபதி ரா.பிரேமதாசாவின் புகைப்படங்களை கொண்ட பாரிய சுவரொட்டிகளை யாழின் வீதியோர மரங்களில் தனது யாழ் வெலிங்டன் சினிமா ஊழியர்களைக் கொண்டு காட்சிப்படுத்தியதுடன், பலாலி விமானநிலையத்தில் ஜனாதிபதி அவர்களுக்கு வரவேற்பு வைபவத்தினையும் ஒழுங்கு செய்திருந்தார்.

நான் திருமணம் முடித்த வேளையில் திரு.கே.குணரட்ணம் அவர்கள் தனது மனைவியுடன் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட அவரது இல்லத்தில் எமக்கு பாரிய திருமண வரவேற்பொன்றினை ஒழுங்குசெய்திருந்தார் இதற்கு யாழ் வர்த்தக சமூகத்தினரும் அழைக்கப்பட்டிருந்தனர். தொழிற்துறை மற்றும் பணிசார் அனுபவங்களுக்கு மேலதிகமாக மக்களுடன் தாழ்மையுடனும் மனிதாபிமானத்துடனும் எவ்வாறு அணுகவேண்டும் என்ற பண்புகளையும் அநேக அனுபவங்களையும் நான் திரு.கே.குணரட்ணம் அவர்களிடமிருந்து பெற்றுள்ளேன். அவருடன் அநேக வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டுள்ளதுடன் அவர் எப்போதும் சாதாரண தர விமான பயணத்தில்

செல்வதோடு 3 அல்லது 4 நட்சத்திர விடுதிகளிலேயே தங்குவதையும் அவதானித்துள்ளேன். தனது செல்வந்த நிலையினை திரு.கே.குணரட்ணம் அவர்கள் ஒருபோதும் ஆடம்பரமாக காண்பித்ததில்லை.

மறுபுறம் திரு.கே.குணரட்ணம் அவர்கள் ஆடம்பரமாக உபசரிக்கவும் மகிழ்விக்கவும் தவறுவதில்லை. தைப்பொங்கல் நாள் இரவுகளில் வருடந்தோறும், தனது நட்பு வட்டத்தில் இருப்பவர்களுக்கு புலர்ஸ் வீதியிலுள்ள அவரது சொகுசு இல்லத்தில் பாரிய விருந்துபசாரங்களை ஒழுங்குசெய்வார். இதில் வழங்கப்படும் நண்டு கரியானது யாழ்ப்பாணத்திலிருந்து விசேடமாக வரவழைக்கப்படும். ஹக் பெர்னாண்டோ, மைத்ரிபால சேனநாயக்க, டீ.பி.இளங்கசிங்க மற்றும் ரத்வத்த குடும்பத்தினர் போன்ற அரசியல்வாதிகளுடனும் இவர் நட்பினை கொண்டிருந்தார். அவரது தொழில்சார் போட்டியாளராக இருந்த சிலோன் தியேட்டரின் ஆல்பர்ட் பேஜ் உடனும் நெருங்கிய நட்பினை கொண்டிருந்தார், நான் உட்பட 4 அல்லது 5 பேருடன் அவர்கள் கிராமமான ஒன்றுகூடல்களை நடாத்துவது வழமை.

1989 இன் துக்ககரமான தினமான ஆகஸ்ட் 9ம் திகதி திரு.கே.குணரட்ணம் அவர்கள் மதியம் ஒருமணியளவில் தொலைபேசியில் என்னைத் தொடர்புகொண்டார் அவ்வேளை நான் அன்றிரவு ஐக்கிய இராச்சியத்திற்கு பயணிக்க இருப்பதனை தெரிவித்தேன். பின்பு எனது நண்பருடன் மதிய உணவிற்காக சென்றவேளை எனது அலுவலக ஊழியர்கள் மூலமாக திரு.கே.குணரட்ணம் அவர்கள் காலமான செய்தியினை தொலைபேசி வழியாக அறியப்பெற்றேன். உடனடியாக அங்கிருந்து எனது அலுவலகத்திற்கு சென்ற வேளை அவர் இதற்கு ஒருசில வருடங்களுக்கு முன்பதாகவே அமெரிக்காவில் இருதய சத்திர சிகிச்சையினை மேற்கொண்டிருந்ததினால் அவர் இயற்கையான முறையிலேயே மரணித்திருக்க வேண்டும் என்றே எண்ணியிருந்தேன்.

இருப்பினும் அவரது செயலாளரை தொடர்புகொண்ட வேளை அத் துக்ககரமான சூட்டு சம்பவத்தினை அறிந்துகொண்டேன். உடனடியாக எனது வெளிநாட்டு பிரயாணத்தினை இரத்துச்செய்து விட்டு அவரது மகன் ஜி.ர.பத்மராஜ் அவர்களை தொடர்புகொண்டு அவருடன் திரு.கே.குணரட்ணம் அவர்களின் பூதஉடலினை பெற சவச்சாலைக்கு சென்றேன். அது ஒரு அதிர்ச்சி மற்றும் துக்கம் நிறைந்த நாளாகும். தனது அலுவலகத்திலிருந்து தனது காரின் முன் ஆசனத்தில் அமர்ந்து பயணிக்கையில் பாதையின் வளைவு ஒன்றில் அண்மித்து வந்த மோட்டார் சைக்கிள் ஒன்றிலிருந்து துப்பாக்கி தாரர்களால் சுடப்பட்டார். அவரது சாரதியினையும் சுட்டபோதும் இலக்கு தவறியதால் அவர் தப்பினார். பின் சாரதி உடனடியாக வைத்தியசாலைக்கு சென்ற போதும் திரு.கே.குணரட்ணம் அவர்கள் வழியிலேயே இறந்ததாக வைத்தியர்கள் அறிவித்தனர். பின்னாட்களில் அவரது செயலாளர், இரகசிய குற்றப்புலனாய்வு பிரிவினர் என்னையும் யாரென விசாரித்ததாக தெரிவித்திருந்தார் ஏனெனில் மரிப்பதற்கு முன் இறுதியாக திரு.கே.குணரட்ணம் அவர்கள் தொலைபேசியில் என்னிடமே உரையாடியிருந்தார்.

1989 இன் அக்கலப்பகுதியானது முற்றிலும் அச்சம் மிகுந்ததாகவும் திரு.கே..குணரட்ணம் அவர்களின் கொலை மற்றும் ஏனைய அநேக கொலைகளுக்கு பின்னும் சமுதாயத்திலே ஒருவிதமான பீதியும் பயமும் தொடர்ந்தே காணப்பட்டது. திரு. காமினி பொன்சேகாவும் நானும் எனது அலுவலகத்திலிருந்து ஒரு குழுவினருடன் மரண சடங்குகளை ஆயத்தம் செய்தோம். அக்காலத்தில் நடைமுறையிலிருந்த அச்சம், பதற்றம் மற்றும் பீதியினிமித்தம் அநேகர் எம்மை தடுத்தபோதும் திரு. காமினியும் நானும் திரு. கே. குணரட்ணம் அவர்களின் இரு புதல்வர்களுடன் அவரது இறுதி ஊர்வலத்தில் அவரது பூதவுடலின் பின் சென்றோம். அவரது ஜா எல பகுதியில் காணப்பட்ட புடவை ஆலையின் வாயிலிலும் கொல்லப்பட்ட சிலரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டன. சிங்கள திரைத்துறை, கலைஞர்கள், மற்றும் தொழில்வாய்ப்புக்கள் மூலம் அநேக பொது மக்கள் என பெரும்பான்மை சமூகத்திற்கு அளப்பரிய பங்களிப்பை வழங்கிய ஒருவருக்கு இவ்வாறான கொடூர முடிவினை அளித்தது உண்மையிலேயே மன்னிக்கமுடியாத ஒரு பாரிய குற்றமாகும்.

1983 இன் காட்டுமிராண்டித்தனமான கருப்பு ஜூலை இனக்கலவரத்திற்கு பொறுப்பானவர்களும் 1989ம் ஆண்டின் கொடூர கொலைகளை முன்னெடுத்தவர்களும் பொறுப்புக்கூறவோ சட்டத்தின் முன் நிறுத்தப்படவோ நியாயம்தீர்க்கப்படவோ இல்லை. மேலும் இந்நாட்டுக்கும் அதன் மக்கள் மற்றும் சொத்துக்களுக்கும் பாரிய இழப்புக்களை ஏற்படுத்தியதன் விளைவாக இந்நாட்டின் வளர்ச்சியினையும் அபிவிருத்தியினையும் அவர்கள் தடுத்தமைக்காக மக்களிடம் மன்னிப்பு கூறவும் இல்லை.

*நிஹால் ஸ்ரீ அமரசேகர*